579

Tirumayilai yamaka antati

திருமயிலை யமக அந்தாதி

19 JUL 1932

திருவாரூர் - சோமசுந்தர தேசிகர்

2320
894.8111
579
3.1932

உ

சிவமயம்

முன்னுரை

தலங்கடோறும் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமான் மீது பாவலரும் நாவலரும் அன்பு மேலீட்டாற் பாடும் பதிகங்கள் பல. பிரபந்தங்களும் பல திறப்படுவனவாம். அவற்றுள் அந்தாதிகளே மிக்குப் பயில்வன. அந்தாதியும் யமகம், திரிபு, மடக்கு முதலாய சித்திரங்களமைத்துப் பாடப்படும். திருச்செந்தில் நிரோட்டக யமக வந்தாதி, திருத்தில்லை யமக வந்தாதி, துறைசை யமக வந்தாதி யெனப்பலவாம். இவை புலவரது கவிபாடுந் திறனைப் புலப்படுத்துவதன்றி வேறு பெருமையுடையதன்று. மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய யமகவந்தாதிகளைப் பதிப்பித்த மகாமகோபாத்யாய பிரமஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள் 'யமக வலங்கார நோக்கி அடிகளின் ஈற்றிலிருக்கும் உடன் மேல் உயிரேற்றாமலும், உயிர்முன் உயிர் வரும்போது உடம்படுமெய் வருவித்து அதன்மேல் உயிரேற்றாமலும் குற்றுகரத்தைக் கெடுத்து அது கெட நின்ற மெய்மேல் உயிரேற்றாமலும் நகரம் வரவேண்டிய விடத்து னகாரமும், னகரம் வரவேண்டிய விடத்து நகாரமும் பதிப்பிக்கப்பட்டன. வாசிப்பவர்கள் உடன்மேலுயிரேற்றியும் உடம்படு மெய் வருவித்து உயிரேற்றியும் குற்றுகரத்தைக் கெடுத்துக் கெட நின்ற மெய் மேலுயிரேற்றியும் நகர னகர பேதங்களை யறிந்தும் வாசித்துப் பொருள் கொள்க' என்று எழுதி யிருக்கின்றார்கள்.

அவ்வாறே திருமயிலை யமக வந்தாதியும்* படிக்கவேண்டிய தொன்றாகும். இந்நூல் 'ஊர் திரை வேலை யுலாவும் உயர் மயிலை'யின்

---

* ...ருமயிலைத் திரிபு அந்தாதி யென்றொன்று உண்டு. அது ...ன மாயூரத்தின்கண் கோயில் கொண்டிருக்கும் சிவ ...ப்பட்டது.

Q23:58·2411
Q23/,457
132

கண் கோயில் கொண்டிருக்கும் கபாலீச்சுரத்தான் மேற் பாடப்பட்டது. காப்பு உள்பட இருபத்தைந்து செய்யுள் கொண்டது. நூலாசிரியர் இன்னாரென்று விளங்கவில்லை. இந்நூலுரையாசிரியர் திருமயிலையில் வாழ்ந்த மகாவித்வான் சண்முகம் பிள்ளை யென்று ஊகிக்க வேண்டியிருக்கிறது. இலக்கணக் குறிப்புக்களும் ஆங்காங்கே காணப்படுகின்றன. அவை இருதலைப் பகரத்துள் காட்டப்பட்டுள்ளன. இந்நூலுக்கு உரையின்றேல் இதன் பெருமை விளங்காது. இதனைச் சிவநேயர்கள் படித்தானந்திக்குமாறு 'சித்தாந்த'த்தின் மூலமாக வெளியிடப்படுகிறது.

இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை

திருவாரூர் - சோமசுந்தர தேசிகன்.

சமாஜ வெளியீடு. ௨

திருமயிலை யமக அந்தாதி

579

9 JUL 1932

இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை

திருவாரூர் - சோமசுந்தர தேசிகர்

பரிசோதித்தது.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,

150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

1932 விலை அணா நான்கு.

சென்னை-600 008.
170115

சாது அச்சுக்கூடம்,

இராயப்பேட்டை,

சென்னை.

Q23:417
N32
2620
894.8111

திருமயிலை யமக அந்தாதி

காப்பு

கூத்தாடு வர்க்க வளந்தோன் பணியரன் கோகிலங்கள்
கூத்தாடு சோலை மயிலையந் தாதியைக் கூறவுரு
கூத்தாடு ளிப்புகழ் வார்க்கருள் கற்பகங் கொண்டல்வண்ணக்
கூத்தாடு மைங்கரன் காப்பாகு மேன்மை கொடுத்திடுமே.

(பதவுரை) கூ - பூமியை, தாள்துவர்க்க - பாதம் சிவக்க, அளந்தோன் பணி அரன் - அளந்த திருமால் வணங்கும் பரமசிவனது, கோகிலங்கள் கூ - குயில்கள் கூவுதலையுடைய, தாடுசோலை - பெரிய சோலைசூழ்ந்த, மயிலை அந்தாதியைக் கூற - திருமயிலை அந்தாதியைச் சொல்லுவதற்கு, உருகு - நெஞ்சம் அன்பான் நெகிழ்ந்து, தாள் - முயற்சியால், துன்னி - காலங்கடோறும் தனது ஆலயத்தின்கண் வந்து, புகழ்வார்க்கு - தன்னைத் துதிசெய்யும் அன்பர்களுக்கு, அருள் கற்பகம்-வேண்டிய வெல்லாம் கொடுக்கும் கற்பகத்தருவாகிய, கொண்டல் வண்ணம் - மேகம்போல நீலவர்ணத்தைப் பொருந்திய, கூத்தாடும் ஐங்கரன் - கூத்தாடுகின்ற ஐந்து கரங்களையுடைய கணேசப்பெருமான், காப்பாகும் - இடையூறு வாராமற் காப்பார்; மேன்மை கொடுத்திடும் - எழுத்து முதலிய ஐந்தியலும் வழுவாமற் பாடும் அறிவுடைமையையுங் கொடுப்பார்- [எச்ச உம்மை விகாரத்தால் தொக்கது. உருகு - உருகூ விகாரம்]

நூல்

சீராக மாதவன் போற்றும் பதாம்புய சேயிதழிச்
சீராக மாத வளந்தரு தண்மதிச் செஞ்சடையாய்

சீராக மாதவர் நல்லோர்கள் வாழுந் திருமயிலைச்
சீராக மாதவ னேராக நல்குன் றிருவருளே. க

(ப - ரை) சீராக - இந்திரன் முதலிய கடவுளர்க்கு மேலான செல்வங்க ளுண்டாம் வண்ணம், மாதவன் போற்றும் பதாம்புய - திருமால் துதிசெய்யும் பாத தாமரையினைப் பொருந்திய சிவனே; சே இதழி சீர் ஆக - சிவந்த கொன்றை மாலையினை யணிந்த அழகிய மார்பனே; மா தவளம் தரு தண் மதி செம் சடையாய் - பெருமையும் வெண்மையும் பொருந்திய குளிர்ந்த பிறையைத் தரித்த சிவந்த சடாமகுடத்தை உடைய பரனே; சீர் ஆகமா - புகழ் பொருந்திய காமிகாதி வாதுளாந்தமாகிய இருபத்தெட்டுத் திவ்யாக மங்களைத் திருவுளம் பற்றின கர்த்தனே; தவர் நல்லோர்கள் வாழும் திருமயிலை சீரா - சரியை, கிரியை யோக மென்னும் மூன்று பாத ஒழுக்கத்தோர்களும் ஞான ஒழுக்கத்தோரும் நிலைபெற்று வாழும் திருமயிலைப் பதியில் எழுந்தருளியிருக்கும் சிறந்த அரனே; கம் ஆதவன் நேராக - விசும்பின் கண் விளங்கும் சூரியனுக்கு ஒப்பாம் வண்ணம், உன் திருவருள் - நினது திருவருளை, நல்கு - அடியேனுக்கு நல்குவாயாக.

திருமயி லைக்கண் மலர்கொன்றைத் தாமர் சிகரமொப்போ
திருமயி லைக்கண் மணியணி வோர்கரஞ் சேருமின் மு
திருமயி லைக்கண் ணன்மரு கோற்கருள் சிற்பரர்பூந்
திருமயி லைக்கண் மகிழ்சோதி யார்பதஞ் சிந்திப்பனே. உ

(ப - ரை) திரு மயிலைக் கள் மலர் - சிறந்த இருவாட்சியினது தேன்பொருந்திய பூவையும், கொன்றை தாமர் - கொன்றை மாலையையும் அணிந்தவர்; சிகரம் ஒப்பு ஓது - மலைக்கொப்பாகச் சொல்லும், இரும் அயிலை கண்மணி அணிவோர் - பெரிய திருமாலாகிய மீனின் கண்மணியைத் தரித்தவர்; கரம் சேரும் மின்முதிரும் அயிலை - கையிடத்துப் பொருந்தும் ஒளிமிகுந்த வேலாயுதத்தை, கண்ணன் மருகோற்கு அருள் சிற்பரர் - விட்டுணுவுக்கு நல்மருகனாகிய சுப்பிரமணியக் கடவுளுக்குக் கொடுத்த ஞான சொரூபர்; பூம் திருமயிலைக் கண் - தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமி சேர்ந்த திருமயிலைப்பதியிடத்து, மகிழ்சோதியார் பதம் சிந்திப்பன் - மகிழ்ச்சியுடனே எழுந்

தருளியிருக்கும் சிவனார் பாதாரவிந்தத்தைத் தியானம் பண்ணுவேன். [அன் ஈறு தன்மைக்கண் வந்தது. ஏகாரம் ஈற்றசை.]

சிந்தாரப் பன்னக வேணிய மாநிலஞ் சேர்ந்தளந்த
சிந்தாரப் பன்னக வேணியெல் லாம்புகழ் தேவவுள்க
சிந்தாரப் பன்னக வேணிதம் போற்றா செந்நெல்கழை
சிந்தாரப் பன்னக வேணின் மயிலைச் சிவனருளே. ௫

(ப - ரை) சிந்து - கங்கையாற்றினையும், ஆர் - ஆத்திமாலையினையும், அ பன்னகம் - முனிவரேவிய பாம்பினையும் தரித்த, வேணிய - சடைமுடியை யுடையவனே, மாநிலம் சேர்ந்து அளந்த சிந்தார்-பெரிய பூமியைப் பொருந்தியளந்த வாமனரும், அப்பன் - திருநாவுக்கரசரும், அகவேணி எல்லாம் புகழ்தேவ - கடல்சூழ்ந்த உலகங்களெல்லாமும் புகழும் தேவனே; உள்கசிந்து ஆர பல் நக வேள் நிதம் போற்று அர - மிகவும் மனமுருகி பல மலைகளிலெழுந்தருளியிருக்கும் வேலாயுதக் கடவுள் தினந்தோறும் துதிக்கும் சிவனே; செந்நெல் கழை சிந்து ஆரம் பன்னக வேணில் மயிலை சிவன் - செந்நெல்லும் கரும்பும் உதிர்க்கும் முத்தங்களைப் பொருந்தி சொல்லப்பட்ட பாவத்தின் கொடுமையில்லாத திருமயிலைப்பதியின் வாழுஞ்சிவனே, அருள் - கிருபைசெய்.

அருண வனன்கற் பகவல் லியநட னண்டர்பதம்
அருண வனன்கற் பகவல் விலையயி லன்றுதொட்ட
அருண வனன்கற் பகவல்லி நாத னணிமயிலை
அருண வனன்கற் பகவல்லித் போதிடத் தண்ணுவனே. ௬

(ப - ரை) அருணவனன் - மானைத்தரித்த கங்காதரன்; கற்புஅகம் அல்லியம்நடன் - முல்லை நிலத்தையும் அல்லியமென்னும் கூத்தையுமுடைய திருமாலுக்கும், அண்டர் - தேவர்க்கும், பதம் அருண அனன் - கால்சிவந்த அன்னவாகனனுக்கும், கல் பக - கிரவுஞ்ச மென்னும் மலை பிளக்கும்படிக்கு, வல் இலை அயில் அன்று தொட்ட-வலிய இலை பொருந்திய வேலாயுதத்தை முன்பு ஒரு காலத்தில் விடுத்த, அருணம் வனன் - கோடி சூரியப் பிரகாசத்தைப் பொருந்திய சுப்பிரமணிய சுவாமிக்கும், கற்பகவல்லி - கற்பகவல்லி யென்னும் பெயரை

யுடைய உமாதேவிக்கும், நாதன் கர்த்தன்; அணிமயிலை அருள் நவன்- அழகு பொருந்திய திருமயிலைப்பதியில் எழுந்தருளியிருந்து பாவி களுக்கு அனுக்கிரகம் செய்யும் நவரூபத்தையுடையவன், நல் கற்பக வல்லிப் போது இடத்து அண்ணுவன் - நல்ல அன்பு பொருந்திய என் னுடைய இதயத்து மலர்ந்த அகவிதழையுடைய தாமரைப் பூவினிடத் துப் பொருந்துவன். [சிவபெருமான் நவந்தருபேதமா யிருப்பன் என் பது சிவஞான சித்தி.]

வனவேட ஞாரணி யக்கங்கொண் டாள்பவன் மாதரெண்ணெ
வனவேட ஞாரணி யக்கனை நட்டவன் வாரெதிர்செல் [வ்
வனவேட ஞாரணி யக்கர வாவென் மயிலை மன்ன
வனவேட ஞாரணி யக்கட லோடுவ ரின்வெல்வனே. ரு

(ப - ரை) வனவேடனுர் - ஆரணியத்தில் வாழும் கண்ணப்ப நாயனுர், அணிஅக்கம் கொண்டு ஆள்பவன்-சாத்தின கண்ணைத் தரித் துக்கொண்டு அவரை யாண்டவன்; மாதர் எண் எவ்வனவேடன் - தாருகாவனத்துத் தவமாதர்கள் ஆசையால் நினைக்கும் இளமை வேடத் தை யுடையவன்; நார் அணி இயக்கனை நட்டவன் - அன்பு பொருந் திய குபேரனைத் தோழனுகவுடையவன்; வாரி எதிர்செல் - வைகை யாற்றின் வெள்ளத்திற்கு எதிரே செல்லும், வனவு ஏடன் - திருப் பாசுரத்தி னெழுத்தைப் பொருந்திய திருவேட்டையுடைய திரு ஞான சம்பந்தர்,; ஆர் ஆணி அக்கு அரவா என் - ஆத்திமாலையையும் அழகிய சங்கு மணியினையும் பாம்பினையுமுடையவனேயென்று தோத் திரஞ்செய்யும், மயிலைமன்னவன் - திருமயிலைப்பதியில் வாழுமிறை வன்; ந வேள் - சிறந்த மன்மதன், தன் ஆரணியம் கடலோடுவரின் - தனது மிகுந்த படைவகுப்பாகிய அக்கடலோடு என்னைப்பொருதற்கு வருவானுகில், வெல்வனே - மன்னவனருளால் அவனைச் சயிப்பேன். [துறை - கடவுட் பக்கம். மன்னவன் வெல்வான். வாரியென்பது வார் என நின்றது.]

வரியானை யானையன் மாயா புரிசத்தி மன்னன்மன்னு
வரியானை யானையன் மாயா புரியுடன் மாலகற்றை

வரியானை யானையன் மாயா புரியென் மயிலையினுண்
வரியானை யானையன் மாயா புரிமலர் வாயன்னமே. ௬

(ப - ரை) வரியானையான் - அழகிய யானைமுகவனுக்கு, ஐயன் - பிதா ; மாயா புரி சத்தி மன்னன் - அன்பில்லாதாருக்கு மாயையைச் செய்யும் உமாதேவிக்கு நாயகன், மன்னு வரியான் ஐ - நிலைபெற்ற பாற்கடலிற்றுயிலும் திருமாலுக்குச் சுவாமி ; ஆன்ஐயன் - இடபவாகனத்தையுடைய பெரியோன் ; மாயாபுரியுடன் மால் அகற்று - பித்தனைப்போலத் தூர்க்கந்தத்தையுடைய உடலால் வரும் மயக்கத்தைத்தீர்க்கும், ஐவரியான் - அஞ்செழுத்தையுடையவன் ; ஐயான் - அழகுள்ளவன் ; ஐயன் - ஐயமேற்றவனது, மாயாபுரி யென் மயிலையின் - மாயாபுரியென்று சொல்லும் பெயரையுடைய திருமயிலைப்பதியில், நாண் வரியான் - வண்டால் ஆக்கிக்கொண்ட வில்லையுடைய மன்மதனோ, னையான் - மடியான், ஐயான் மாயா - வியப்புடைய இராப்பொழுதோ விடியாது ; புரிமலர்வாய் அன்னமே - அன்னம் பொருந்திய மலர்போலும் வாயையுடைய தோழீ! [மாயாது என்பது கடை குறைந்து நின்றது. துறை. தலைவன் பொருள்மேற் பிரிந்துழி தலைவி கலங்கல். யான் என் செய்வேனென்பது குறிப்பெச்சம்.]

வாயனந் தங்க டருமஞ் செயப்பொருள் வாழ்த்தவுனை
வாயனந் தங்க டருகிலன் வேதன் மனத்தின்மகிழ்
வாயனந் தங்க டருளிதழ்க் கஞ்ச மதியெனவெல்
வாயனந் தங்க டருந்தட வாவி மயிலையனே. ௭

(ப - ரை) வாயன் - மெய்ம்மையனே! அந்தங்கள் தருமம் செயப்பொருள் - அழகுகளையுடைய நினது புண்ணியம் செய்தற்குப் பொருள்களையும், வாழ்த்த உனைவாய் அனந்தங்கள் - நின்னைத் தோத்திரம் செய்தற்கு எண்ணில்லாத வாய்களையும், தருகிலன் வேதன் - பிரமன் படைத்திலன் ; மனத்தில் - உள்ளத்து, மகிழ்வாய் அனம் தங்க - மகிழ்ச்சியாக அன்னங்களிருக்கும், அடர் - பொற்றகடுபோல, உள் ; நினைத்தற்கேதுவாகிய, இதழ்க்கஞ்சம் - இதழையுடைய செந்தாமரைப் பூக்கள் சூரியனைப் போலவும், மதியென - சந்திரனைப்போலவும், எல்வாய் அல் - பகற் காலத்தும் இராக்காலத்தும், நந்து - சங்கங்கள், அடரும் -

சேர்ந்திருக்கும், அங்கு - அவ்விடமாகிய ஆகாயம்போலும், தடம்வாவி மயிலையன் - இடமகன்ற வாவி சூழ்ந்த திருமயிலைப்பதியில் வாழுஞ் சிவனே! [தியானம் பண்ணுதற்கு ஒருமையில்லாத மனதுடையே னென்பது குறிப்பெச்சம். சூரியனைப் போலவென்பது அவாய் நிலையான் வந்தது. அன்னம் தங்குமென்பது அனம் தங்குமென்று குறைந்து நின்றது. வேதன் தருகிலன்.]

அனேகாவென் பார்க டமக்குப் பலவுரு வாந்தகுதி
அனேகாவென் பார்கடத் தோர்பாவை செய்த வவர்க்கருளை
அனேகாவென் பார்கடந் தாரறி யாய்பொழி லாமயிலை
அனேகாவென் பார்கட னஞ்சார் கிரீபத்தை யாசைநெஞ்சே.

(ப - ரை) அனேகா என்பார்கள் தமக்கு - பல உருவத்தை யுடையவனேயென்று நினைத்தவர்க்கு, பல உரு ஆம் தகுதியன் - பல வடிவாய்வரும் முறைமையுடையவனே; ஏகா - என்றும் ஒரு தன்மை யுடையவனே; என்பு ஆர் கடத்து - எலும்பு நிறைந்த குடத்தினின் றும், ஓர் பாவை செய்த அவர்க்கு - அவ்வெலும்புகளை யொப்பற்ற பூம்பாவையாகச் செய்த சம்பந்தமூர்த்திக்கும், அருள் ஐயன் - திருவருளைக் கொடுக்கும் கர்த்தனே; ஏகா வென் பார் - நீங்காத வெற்றி யையுடைய பூமியை, கடந்தார் - கீண்டு தேடிய மாயனால், அறியாய் - அறியப்படாதவனே; பொழிலாம் மயிலையனே - எக்காலமுஞ் சோலை யுண்டாகாநின்ற திருமயிலைப்பதியில் வளர்பவனே என்று ஆசை நெஞ்சே - வீணாசை கொண்ட நெஞ்சமே! கா என் - இரட்சியென்று சொல்; கடல் நஞ்சு ஆர் கிரீபத்தை பார் - கடலிலுண்டாகிய விடம் பொருந்திய அவனது கந்தரத்தைப் பார்ப்பாயாக. [ஈ என்னுந் தோன்று எழுவாய்க்கு என், பார் என்பன இரண்டும் பயனிலை. வென் - வென்றி.]

ஆம்பலஞ் சங்கத் தரளந் தலரு மணிமயிலை
ஆம்பலஞ் சங்கத் தரியுரி யாயரு ளாத்திமுல்லை
ஆம்பலஞ் சங்கத் தலைமதி தென்ற லலரிசைக்கு
ஆம்பலஞ் சங்கத் தடன்மார வேள்கணைக் காற்றிலளே. ௬

(ப - ரை) ஆம்பல்-குமுதங்கள், அம், சங்கம் தாளத்து அலரும் - அழகிய சங்கங்களீன்ற முத்தங்களின் ஒளியால் மலர்கின்ற, அணி

மயிலை-அழகிய திருமயிலைப் பதியிடத்து வாழும், ஆம்பல் அஞ்சு அங்கத்து - யானைகள் அஞ்சுதற்கு ஏதுவாகிய உருவத்தையுடைய, அரியுரியாய் - நாசிங்கத்தின் தோலைப் போர்த்துக் கொண்டவனே; அருள் ஆத்தி-உனது ஆத்தி மாலையைக் கொடுப்பாயாக; முல்லை அம்பல் அஞ்சம் (ஹம்சம்) - முல்லை யரும்பாகும் தந்தங்களைப் பொருந்திய அன்ன நடையையுடையாள், கத்து அலை-ஒலிக்கும் கடலும், மதி-சந்திரனும், தென்றல் - தென்றற் காற்றும், அலர் - பலர் அறியச் சொல்லும் பழிமொழியும், இசைக்கும் ஆம்பல் - ஊதும் வேய்ங்குழலுமாகிய, அஞ்சு அங்கத்து - ஐவகை யுறுப்பிற்குங், அடல் மாரவேள் கணைக்கு - கொலை செய்யும் மன்மத பாணத்திற்கும், ஆற்றிலளே - எதிர் நின்று ஆற்ற மாட்டாள். [**துறை** - கடவுட்பக்கம்.]

இலங்கங் குழையத் தவஞ்செய் மயிலைக் கிறைவர்மன்னு
இலங்கங் குழையத் தரவிந்த னூர்சிர மேந்தார்சங்க்
இலங்கங் குழையத் தரவெற்பின் மின்னுட் கிமயமெச்ச
இலங்கங் குழைபத் தனங்கருங் கண்க ளிடைவஞ்சியே. ௧௦

(ப-ரை) இல் - மனையாளாகிய உமாதேவி, அங்கம் குழைய தவம்செய் மயிலைக்கு இறைவர் - திருமேனி வருந்தத் தவஞ் செய்த தலமாகிய திருமயிலைப் பதிக்குக்கர்த்தர்; மன்னு இலம் - நிலைபெற்ற வீடாகிய, கம் - சலமும், குழை - இலைகளும், அத்து - பொருந்தும், அரவிந்தனூர் சிரம் ஏந்து அரர் - தாமரைப் பூவிலிருக்கும் பிரமதேவர் சிரத்தைக் கரத்தில் தரிக்கும் அரனூர்; இலங்கு அம் சங்கங் குழை அத்தர் - விளங்கும் அழகிய சங்கக் குழையையுடைய சிவனுருடைய, அவெற்பின் மின்னுட்கு - அந்த மலையிடத்திற்கண்ட மின்போன்ற மங்கைக்கு, இமயம் மெய்ச்சயிலம் - இமயமென்னும் மெய்யாகிய மலையும், கங்கு உழை - தினைப்புனத்திற் சஞ்சரிக்கும் மானும், அம் தனம் கரும் கண் - அழகிய கொங்கைகளும் கரிய கண்களுமாம்; இடை வஞ்சியே - இடைவஞ்சிக் கொடியாம். [**துறை** - இவ்விடத்து இவ்வியற்று என்றல்.]

வஞ்சிக்கு முப்புர மால்கணை மேருவில் வாய்ப்பவெய்தி
வஞ்சிக்கு முப்புர மாண்வென் மயிலை வரதமலை

வஞ்சிக்கு முப்புர மால்சேரப் பாலருண் மன்னகைத
வஞ்சிக்கு முப்புர மால்செலப் பாதம் வழங்குவையே. கக

(ப - ரை) வஞ்சிக்கு - போரிடுதலைக் குறித்துச் சொல்லுதற்கு, உம் - உம்முடைய, உப்பு உரம் மால் கணை - கடலிடத்துப் பள்ளி கொள்ளும் திருமால் பாணமாயும், மேருவில் - மகமேருமலை வில்லாயும், வாய்ப்ப எய்தி - வாய்க்கும்படி பொருந்தி, வஞ்சிக்கும் முப்புரம் மாண்வென் - தேவர்களை வஞ்சித்தலைச் செய்யும் முப்புரத்தார் பெருமையை வென்ற, மயிலைவரத - திருமயிலைப் பதியில்வாழும் வள்ளலே! மயிலைவஞ்சிக்கும் - திருமாலுக்கு ஒரு பாகம் கொடுத்ததேயன்றி மலைமகளுக்கும், உப்பு - இனிமையையும், உரம் - ஞானவலிமையையும், மால் - விருப்பத்தையும், சேர - பொருந்த, பால் அருள் மன்ன-இடப்பாகத்தைக் கொடுத்த கர்த்தனே; கைதவம் - வஞ்சனையும், சிக்கும் - பிணக்கும் பொருந்திய, உப்புரம் - அந்தத் தேகங்களாலுண்டாகிய, மால் செல - மயக்கவினை யென்னைவிட்டுப்போக, வழங்குவையே-உன் திருவடியை யருளுவாய். [உப்புரம் - இவ்வுடலுக்குமுன் எடுத்த உடலங்கள். மால் - ஆகுபெயர், குன்றி நெஞ்சுபக வெறிந்த அஞ்சுடர் நெடுவேல் என்றாற்போல. உரமென்பது ஈண்டு இடப்பொருட்டாய் நின்றது. நீ வழங்குவை.]

குவையுரு முத்தலை நீக்கு மயிலைக் குழகரிலங்
குவையுரு முத்தலைச் சூலர்பொற் றாண்மனங் கோயில்செய்தாங்
குவையுரு முத்தலை யுற்பவந் தீர்ந்து குறைவின்றியோங்
குவையுரு முத்தலை யெய்து மரவெனக் கூற்றஞ்சுமே. கஉ

(ப - ரை) குவையுருமுத்து - குவியலாக விருக்கும் வெண்ணிற முத்தங்கள், அல்ஐநீக்கு மயிலைக் குழகர் - இருளினைத்தாக்கும் திருமயிலைப் பதியில் வாழும் நித்தியமாயிருக்கும் இளமையுடையவர்; இலங்குவை முத்தலை சூலர் - பிரகாசிக்கும் கூர்மையுடைய வடிவினையும் மூன்று தலையினையும் பொருந்திய சூலாயுதத்தாரது, பொற்றாள் - பொலிவு பொருந்திய பாதத்தை, மனம் கோயில் செய்தாங்கு வை - நெஞ்சமே, உன்னைக் கோயிலாகச் செய்து அக்கோயிலுள்ளே வைப்பாயாக; உரு முது அலை உற்பவம் தீர்ந்து - அச்சத்தைச் செய்யும்

பழைய கடல்போலும் பிறவியெல்லாம் தீர்ந்து, குறைவின்றி ஓங்குவை - ஞானத்திற் சிறிதுங் குறையாமல் யாவர்க்கும் மேலாயிருப்பாய்; உருமுத்தலைசெல்லும் அரவு என கூற்று அஞ்சுமே - இடியினிடத்திற் செல்லும் பாம்பு அஞ்சுவதுபோல இயமன் நம்மிடத்திற்கு வருதற்கு அஞ்சுவன். [பழைய கடல் - சகரர் தோண்டுவதற்கு முன்னுள்ள கடல். முந்து முத்தென வலித்து நின்றது. உருமுத்தலையெய்துமரவு என்றது அபூத உவமை.]

அஞ்சன நாட்டத் தரம்பையர் போல வணிநடைகொள்
அஞ்சன நாட்டத்தன் போற்று மயிலைய னன்புசெய்யும்
அஞ்சன நாட்டத்த னம்புயத் தாடுணை யாகிநெஞ்சே
அஞ்சன நாட்டத் தரந்தையைத் தீர்த்துவந் தாட்கொளுமே.

(ப - ரை) அஞ்சனம் நாட்டத்து அரம்பையர் போல - கரியகண்களையுடைய தெய்வப் பெண்களைப்போல, அணி நடை கொள் அஞ்சன் - அழகிய நடையையுடைய அன்னத்தை வாகனமாகவுடைய பிரமனும், அ நாட்டத்தன் - பல கண்களையுடைய மருத நிலத்துக்கிறையாகிய இந்திரனும், போற்று மயிலையன் - தோத்திரம் செய்யும் திருமயிலைப் பதியில் வாழுஞ் சிவன்; அன்பு செய்யும் அம்சனம் நாட்டத்தன்-தன்னிடத்து அன்பு வைக்கும் அழகிய மனிதரை உயர்ந்த பதவிகளிலே வைக்குந் திருநோக்கத்தை யுடையவனது, அம்புயம் தாள் துணையாகி - தாமரை மலர்போன்ற பாதம் நமக்குத் துணையாயிருந்து கொண்டு, நம் நாட்டத்து அரந்தையைத் தீர்த்துவந்து ஆட்கொள்ளும்- நம்முடைய வாழ்நாளுக்கு வரும் அவமிருத்துத் துன்பத்தை நீக்கி மகிழ்ந்து நம்மை யடிமைகொள்ளுமாதலால், நெஞ்சே அஞ்சல்-மனமே! நீ அஞ்சவேண்டாம். [நம் நாடு என்பது விகாரம். காலசக்கரம் நேரே நடவாமல் இராசிகளை இடையிலே தடுத்து அவமிருத்தை யுண்டாக்கும்.]

ஆட்டானம் மானங்கை யம்புலி தங்கொள் ளரனடத்தும்
ஆட்டானம் மானங்கை யம்புலி வேணிய னைம்முகன்பேட்
ஆட்டானம் மானங்கை யம்புலி நோன்மயி லைப்பதியா
ஆட்டானம் மானங்கை யம்புலி சேட னமரர்களே. கச

(ப - ரை) ஆட்டான், வெற்றியையுடையான் ; அம்மான் - உயிர்கட்கெல்லாம் பிதாவானவன் ; அங்கை - சங்குமணியினையும், அம் - கங்கையினையும், புல் - அறுகினையும், இதம் கொள் அரன் - நன்மையுடனே தரித்துக்கொள்ளுஞ் சிவன், நடத்தும் ஆட்டான் - செலுத்துகின்ற ஆட்டுக்கடா வாகனத்தை யுடைய அக்கினியையும், நமான் - சிறந்த மானையும், அங்கை - அங்கையிடத் தேந்திய, அம்புலி வேணியன் - பிறையையும் சடைமுடியிற் றரித்த பரன், ஐமுகன்-ஐந்து திருமுகத்தையுடையவன், பேடு ஆட்டான் அம்மான் - பேடாடலென்னுங் கூத்தையுடைய காமனுக்கு அம்மானென்னும் முறையையுடையோன், அங்கை ஐயம் புல்லினேன் - தாருகாவனத்து ஐயமேற்றவன், மயிலைப்பதிஆள் - திருமயிலைப்பதியில் வாழுஞ் சிவபெருமானுடைய அடியார் யாவரென்னில், தானம் மால் - மாவலியிடத்திற்றானம் வாங்கிய திருமாலும், நங்கை - அவனுடைய செந்திருவும், அம்புலி - அழகிய வியாக்கிரபாதரும், சேடன் - பதஞ்சலியும், அமரர்கள் ஏ-தேவர்களுமாம். [அக்கு அங்கு மெலித்தல் விகாரம். தானம்மால் - ஒற்றில்வழி ஒற்றாய் வந்தது.]

அமரச் சலந்தரற் காய்ந்தோய் மயிலையர சடையுள்
அமரச் சலந்தாம் வைக்கும் பரம வகத்துவன்னி
அமரச் சலந்தர ளத்தி னகைமுக மாக்குவஞ்சம்
அமரச் சலந்தரந் தந்தரு ணல்ல வறிவென் றுமே. கரு

(ப - ரை) அமர் அ சலந்தரர் காய்ந்தோய் - போர்த்தொழிலையுடைய அந்த சலந்தராசுரனைக் கோபித்தவனே ; மயிலையர - மயிலையில் வாழுஞ் சிவனே ; சடையுள் அமர - சடையிற் பொருந்த, சலம் தாம் வைக்கும் பரம - கங்கையினையும் வெண்டலையினையும் அணிந்த பரமனே ; அகத்து வன்னிச்சலம் அமர - நெஞ்சகத்து அக்கினிபோல கோபமிருக்க, தாளம் அத்து இன் நகைமுகம் - முத்தங்களைப் போல முறுவலித்தலை முகத்தின் கண்ணும் உண்டாக்கும், வஞ்சம் அமர் அச்சு - வஞ்சனையை விரும்புதற் கேதுவாகிய உடலை, அலம் தாம் தந்து - எடுத்தலல்லாத மேன்மை வகையும் கொடுத்து, நல்லறிவு என்றுமே அருள் - சிவஞானத்தை என்றுமே தந்தருளுவாய். [என்றுமருள் என்றது சமவாத கண்டனம்.]

1791575 ... 600 005. G28'-417 N32

என்றருந் தந்த நினைவுல கத்தவர்க் கேழைநெஞ்சே
என்றருந் தந்த மிலக்கியங் கற்றறி வெய்துவைநீ
என்றருந் தந்த னெனச்செய் மயிலை யிறைவரந்த
என்றருந் தந்தமில் போகமெல் லாம்பின் பிடரில்லையே. கசு

(ப -ரை) என்தரும் உலதத்தவர்க்கு தம்தம் நினைவு - உலகத்துள்ள உயிர்கட்கு தங்கள் தங்கள் நினைவுகள் என்ன பயனைக் கொடுக்கும்? ஏழை நெஞ்சே - அறிவில்லாத நெஞ்சமே! என்றும் அரும் தந்து அம் இலக்கியம் - எக்காலத்தும் அரியவாகிய நூல்போன்ற அழகிய இலக்கியங்களை, கற்று அறிவு எய்துவை நீ - எனக்குத் துணையாகியநீ ஓதி ஞானத்தைப் பொருந்துவாய்; என்றும் அரும் தந்தன் என செய் மயிலை இறைவர் - எக்காலத்தும் பல்லில்லாதவனென்று சூரியனைச் செய்த திருமயிலைப் பதியில் வாழும் சிவனார், அந்தம் இல் போகம் எல்லாம் - முடிவில்லாத போகங்களை யெல்லாம், தந்த என்று அருந்து - நமது வினைக்கு ஈடாக்கி யமைதாக் கொடுத்தனவென்று கருதிப் புசிப்பாயாக, பின்பு இடர் இல்லையே - இந்நிலையில் நின்றபிள்ளாய் உனக்குப் பின்பு ஒரு துன்பமும் இல்லை. [தூய்மையும் நுண்மையு முடைய நூல் போன்ற நீ அருந்து என்பது இசை யெச்சம்.]

இடப்பாலை யானனத் தான்பணி சங்கரன் யாழினிசை
இடப்பாலை யானனத் தான்ஞான மூர்த்தி யிமயமின்சேர்
இடப்பாலை யானனத் தான்மயி லைப்பதி யேத்திலர்போல்
இடப்பாலை யானனத் தான்மகள் சோற் கெழுதினனே. கஎ

(ப - ரை) இடம்பால் - விசாலம் பொருந்திய பாற்கடலினையும், ஐ ஆல் - அழகிய ஆலையுமுடைய, ந நத்தான் பணி சங்கான், நல்ல சங்கபாணி வணங்கும் சிவபெருமான்; யாழின் இசைத்திடப்பாலை - வீணையாலே சொல்லப்படும் அந்தப் பாலைப் பண்ணைப்பாடும், ஆனன் - இடபவாகனத்தன்; அத்தம் ஆன் - அந்தி நிறம் போன்ற சிவந்தமேனியையுடையான், ஞான மூர்த்தி-ஞான சொருபன், இமையமின் சேர் இடப்பாலை யானனத்தான் - மலைமகள் பொருந்திய வாமபாகத்தையுடைய சிவபெருமானது, மயிலைப்பதி யேத்திலர் போல் - திருமயிலைப் பதியைத் தோத்திரஞ் செய்யாதார்போல, இடப்பாலையான்-பாலை

நிலத்திடத்து, அனத்தான்-பிரமதேவன், மகள் சோற்கு எழுதினன் - என் மகள் செல்லுதற்குத் தலையில் எழுதினான். [நத்தான், விகாரம். இடைப்பாலை, முன் மொழி பின்மொழி யாயிற்று.]

இனற்கிளைப் பாற்று வணத்திரி சூல ரெழுபரித்தேர்
இனற்கிளைப் பாற்று வணக்கா மயிலை யிறைவரன்பா
இனற்கிளைப் பாற்று வணத்தார்நல் காவிடி னின்றிரவின்
இனற்கிளைப் பாற்று வணரலை மூழ்குவ ளேந்திழையே. ௧௮

(ப - ரை) இனல்கிளை - இனிய இருட் கூட்டத்தை, பாற்று - போக்கும், வணம் திரிசூலர் - ஒளி பொருந்திய முத்தலைச் சூலத்தர்; எழுபரித்தேர் இனற்கு - எழுபச்சைக்குதிரை கட்டிய பொற்றேரை யுடைய சூரியனுக்கு, இளைப்பு ஆற்று வணக்காம் மயிலை யிறைவர் - அனுதினமும் செல்லும் இளைப்பினைத் தாக்கும் அழகிய சோலைகள் சூழ்ந்த திருமயிலைப் பதியில்வாழுங் கர்த்தனே - இ நல் கிளைப்பால் அன்பாய் - இந்த நல்லதாகச் சென்ற கிளியிடத்துக் கிருபை செய்து, துவணம் தார் நல்காவிடின் - எண்டோளிற் கிடந்தசையும் சிறந்த கொன்றை மாலையைக் கொடாது விட்டால், இன்று இரவின் இன்றை இராக்காலத்தில், இனல்கிளைப்பு ஆற்று - துன்பப் பெருக்காகிய ஆற்றின்கண் வணர் அலை மூழ்குவள் ஏந்திழை - சோகமாகிய வளைந்த அலையின் கண்ணே யழுந்துவாள் ஏந்திய ஆபரணங்களை யுடைய தலைவி. [துறை - தலைவி தூதுவிடுதல் கண்டதோழி சொல்லியது. ஏகதேச வுருவகம்.]

எந்தலை யந்தாத் தாரக மேவு மிறைமயிலை
எந்தலை யந்தரத் தாரகங் கைத்தலத் தேற்றவண்ணல்
எந்தலை யந்தரத் தாரக லாதணி யீசனளி
எந்தலை யந்தரத் தாரக மெய்ப்பொரு ளீகுவனே. ௧௯

(ப - ரை) எந்தல் ஐ - கயிலை மலையி லெழுந்தருளி யிருக்கும் சுவாமி ; அந்தாம் தாரகம் மேவும் இறை - ஆகாயத்திலே தேவர்கள் மனம் விரும்புங் கர்த்தன் ; மயிலை எந்தல் - திருமயிலைப் பதியில் வாழுஞ் சிறந்தோன்; ஐயம் தா - தாருகாவனத்துத் தவமாதர் பிச்சை

யிட, தார் அகங்கைத் தலத்து ஏற்ற அண்ணல் - மலர்போலும் திருக் கரத்தினிடத்து ஏற்றுக் கொண்ட சிவன்; எந்து அலை அம் - ஏந்திய அலையை யுடைய கங்கையினையும், தாத்தார் - தலைமாலையினையும், அகலாது அணி ஈசன் - எக்காலமும் நீங்காமல் தரிக்கும் பரமேசுரன் அளியேம்தலை - எளியேமாகிய எங்களிடத்து, அம் தாம் தாரகம் மெய் பொருள் ஈகுவன் - அழகும் மேம்பாடும் பொருந்திய தாரகமந்திரத்தை யனுக்கிரகிப்பான்.

ஈயா தவன யனத்துணை யெய்துத லில்லைபொருள்
ஈயா தவன யனத்துறு நற்கதியெய் தல்வில்லி
ஈயா தவன யனத்து விதம்பெற வெண்ணுபுரார்
ஈயா தவன யனத்து மயிலை யிறையவனே. ௨௦

(ப - ரை) ஈ ஆதவன் நயனத்துணை எய்துதல் இல்லை - பரக்கும் ஈயானது சூரியன் கண்ணளவும் செல்லுதலில்லை - (அதுபோல) பொருள் ஈயாதவன் - தேடிய பொருளை நல்லோர்க்குக் கொடாதவன், அயனத்து உறு நல்கதி எய்தல் - சன்மார்க்கத்தினலே பொருந்தும் நல்ல பதவியைப் பொருந்துதல், வில்லி - மலையை வில்லாகவுடைய வனே, இயாதவன் அயன் அத்துவிதம் பெற ஒண்ணு புரார் - யது வங்கிசத்தானகிய திருமாலும் பிரமனும் ஞானனந்த அத்துவித மோட்சத்தைப் பெறுதற்குத் தியானம் பண்ணப்பட்ட சிவனே, அவனயல் நத்து - அவன் கோயிலின்கணுள்ள கடலில் சங்கங்கள் உலாவும். மயிலை யிறையவனே - திருமயிலைப் பதியில் வாழுஞ் சிவனே, யாது - எய்தற்குரியது எது? [அடியேற்கு லோபமில்லாத விதரணத்தையும் அதற்கேற்ற பொருள்களையும் தந்தருள்வாய் என்பது குறிப்பெச்சம். எய்துதல் யாது என்பது கருத்து.]

இறையாய வெள்ளங்கத் தார்கலிப் பார்புரந் தேதுபெற்றத்
இறையாய வெள்ளங்கத் தார்சுகம் வேட்குநெஞ் சேயுய்குவாய்
இறையாய வெள்ளங்கத் தாரெண் புயத்த னெழின்மயிலை
இறையாய வெள்ளங்கத் தார்நெய்யின் மேவுவ னெங்குமன்றே.

(ப - ரை) இறையாய வெள்ளம் - அரசாகிய வெள்ள மென்னும் எண்ணுடையோர், கத்து ஆர்கலி புரந்து ஏது பெற்றது - ஒலிக்

குங் கடல் சூழ்ந்த பூமியை இரட்சித்தலாற் பெற்ற பயன் யாது? இறை - பூமியிற்றங்கும், ஆய வெள் அங்கத்து - மகளிருடைய மல பாண்ட மேல் திகழும் மூலை முதலிய அங்கங்களால், ஆர்சுகம் வேட்கும் நெஞ்சே - நிறைந்த சுகத்தை விரும்பும் நெஞ்சமே! இறையாய உய்குவாய் - ஒரு இறைப் பொழுதாகினும் தியானம் பண்ணினுல் பிறவிக் கடலை நீந்திக் கரையேறுவாய், (தியானிப்ப தெவ்வாறெனில்) வெள் அங்கம் தார் எண் புயத்தன் - வெள்ளிய எலும்பு மாலையை யணிந்த எட்டுத் திருப்புயத்தையுடையவன், எழின் மயிலை இறை - அழகிய திருமயிலைப் பதியில் வாழும் கர்த்தன், ஆய வெள்ளங்கு - அந்தச் சிறிதாய வெள்ளத்தினிடத்தில், அத்துஆர் நெய்யின் - பொருந்தி நிறைந்த நெய்போல, மேவுவன் எங்கும் அன்றே - எங்கும் வியாபித்திருப்பன் என்று கருதி நீ உய்குவாய்.

என்னாக ராவணற் பொற்சடை யாய்கட லேய்ந்தவிடம்
என்னாக ராவணற் காய்ந்தவன் போற்று மிறைவகுழை
என்னாக ராவணற் காமயி லைப்பதி யீசவிவட்க்
என்னாக ராவணற் கஞ்சநல் காத திதழியையே. உஉ

(ப - ரை) என்நாகு அராஅணல் பொன்சடையாய் - நஞ்சுடையதென்று இகழப்படும் இளம்பாம்புகளைப் பொருந்துதலை யுடைய பொன்போன்ற சடையையுடையவனே; கடல் ஏய்ந்தவிடம் மென் ஆக - கடலிற் பொருந்திய ஆலகாலமென்று சொல்லத்தக்க கரிய உடைமையைப்பெற்ற, ராவணன் காய்ந்தவன்போற்றும் இறைவ - இராவணனைச் சங்கரித்த இராமர் போற்றும் சிவனே; குழை என் ஆகரா - திருச்செவியிற் சாற்றுங் குழையாகிய ஒள்ளிய சங்கத்தையுடைய அரனே; வணல் கா - வளவிய நல்ல சோலைகள் சூழ்ந்த மயிலைப்பதி ஈச - திருமயிலைப்பதியில் வாழுஞ் சிவனே; இவட்கு - இத்தலைவிக்கு, என்னாக - ஏதாக, ராவணற்கு அஞ்ச - இராக்காலத்திற்கு அண்ணலாகிய சந்திரனுக்குப் பயப்படும்படி, நல்காதது இதழியையே - கொன்றை மாலையைக் கொடாதது என்? நீ சொல். [எல் - இகழ்ச்சி, இராவென்பது ராவென நின்றது.]

இதவா ரணங்கொடி யாக்கொண்ட தேவர்க் கிறையவிபர்
இதவா ரணங்கொடியரா விட்டபோ தட்டவெந் தைநற்புன்
இதவா ரணங்கொடி மாசலை சேர்மயி லீசன்றவள்
இதவா ரணங்கொடிப் பூமானை யன்பருக் கீபவனே. உரு

(ப - ரை) இதம் ஆரணம் கொடியாக கொண்ட தேவர்க்கு இறை - உயிர்கட்கு நன்மையைச்சொல்லும் வேதத்தைக் கொடியாகக் கொண்ட பிரமனுக்குங் கர்த்தன்; அ விபரித வாரணம் கொடியரா விட்டபோது அட்ட எந்தை - அந்த அதிசயத்தைச் செய்யும் யானையைக் கொடிய தவத்தினையுடைய முனிவர் செலுத்தின காலத்தில் அதனை யுரித்துப்போர்த்த வெந்தை; நல்புனித வார் அணம்கொடு - நல்ல பரிசுத்தம் பொருந்திய கங்காதேவியுடனே, இமாசலைசேர் மயிலீசன் - பர்வதராஜன்மகளாகிய உமாதேவியும்பொருந்தும் திருமயிலையில் வாழும் சிவன்; தவளித வாரணம் கொடிப்பூ மா அன்பருக்கு ஈபவன் - வெண்மையான பாஞ்சசன்யமான சங்கத்தை யுடையவனும் கொடிப்பூவாகிய தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமிக்குக் கணவனுமான திருமாலாகிய அன்பருக்கு அருளுவான். [அப்படிப்பட்ட சிவபெருமானை நீ வணங்குவை யென்பது குறிப்பெச்சம். அவன் ஈபவன்.]

பவனம் பிருதிவி வான்றீகம் மாகும் பவனைவிரும்
பவனம் பிருதி விடாமற் செயச்செய் பரனையுன்னும்
பவனம் பிருதிவி யஞ்சேர் மயிலைப் பதிதினஞ்செய்
பவனம் பிருதி விதுப்போல் விளங்குவை பாரினெஞ்சே.

(ப - ரை) பவனம் பிருதிவி வான்தீகம் ஆகும்பவனை - வாயுவும் பிருதிவியும் ஆகாயமும் அக்கினியும் அப்புவுமாகிய பஞ்ச பூதத்தை யுண்டாக்குஞ்சிவனை, விரும்ப-இச்சிக்க, வன் அம்பு - வன்மையுடைய அம்பாகிய திருமால், இருதிவிடாமற் செயச் செய்பரனை - நீங்காமற் செய்ய அனுக்கிரகம்பண்ணுஞ் சங்கரனை, உன்னும் பவநம்பு - தியானம்பண்ணும் பிறப்பையே விரும்புக; திவியம்சேர் மயிலைப்பதி இரு-

அதிசயம்பொருந்திய மயிலைப்பதியிடத்து எக்காலமும் இருப்பாயாக; தினம் செய்பவன் - நாளையுண்டாக்கும் சூரியனைப்போலவும், அம்பு ருது இதுப்போல் - செல்விருதுவாகிய கார்காலத்துவருஞ் சந்திரனைப் போலவும், விளங்குவை பாரின் நெஞ்சே - பூமியினிற் பிரகாசிப்பை நெஞ்சமே. [அப்பு - அம்பு, இந்து - இது விகாரம். நீ விளங்குவை.]

கபாலீச னடிகளே சரணம்

[முற்றும்.]

Q25:47
17015
சென்னை-600